මුද්දර නිවේදන අංක
முத்திரைச் செய்தித்தாள் இல. 41

ශ්‍රී ලංකා
සමරු නිකුත් කිරීම
இலங்கை
ஞாபகார்த்த வெளியீடு

# අන්තර්-පාර්ලිමේන්තු සංගමය
# වසන්ත රැස්වීම

## அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம்
## வசந்தகாலக் கூட்டம்

# 1975. 04. 01

තැපැල් සහ විදුලි සංදේශ අමාත්‍යාංශයේ
ප්‍රකාශනයකි

அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சினால் வெளியிடப்பட்டது.

මුද්දර නිවේදන අංක 41

තැපැල් සහ විදුලි සංදේශ
අමාත්‍යාංශය,
ආදිපාද වීදිය,
කොළඹ 1,
1975.04.01.

1975 මාර්තු මස 31 වන දින සිට අප්‍රේල් මස 5 වන දින දක්වා බණ්ඩාරනායක අනුස්මරණ ජාත්‍යන්තර සම්මන්ත්‍රණ ශාලාවෙහිදී පවත්වනු ලබන අන්තර් පාර්ලිමේන්තු සංගමයේ 1975 වර්ෂයේ වසන්ත රැස්වීම උත්සවාකාරයෙන් විවෘත කිරීම නිමිත්තෙන් තැපැල් හා විදුලි සංදේශ අමාත්‍යාංශය සමරු මුද්දරයක් නිකුත් කරනු ඇත.

අන්තර් පාර්ලිමේන්තු සංගමය, එහි සාමාජික රටවල පාර්ලිමේන්තු නියෝජනය කරන ජාතික කණ්ඩායම්වල අර්ධ නිල සංවිධානයකි. මෙම සංගමය ආරම්භ වූයේ යුරෝපයේ 19 වන සියවසේ දෙවන භාගයේදී සාමය රැකගැනීම පිණිස විවිධ රටවල පාර්ලිමේන්තු මන්ත්‍රිවරුන්ගේ සංවිධානයක් පිළිබඳව ඇතිවූ අවශ්‍යතාව නිසායැයි සැලකිය හැකිය. 1889 දී පිහිටුවන ලද අන්තර් පාර්ලිමේන්තු සංගමයේ ආදී කර්තෘවරුන් වශයෙන් සැලකිය හැකි අය වශයෙන් බ්‍රිතාන්‍ය පාර්ලිමේන්තු මන්ත්‍රිවරයකුවූ විලියම් රැන්ඩෝල් ක්‍රිමර් මහතාගේ නමත්, ප්‍රංශයේ චේම්බර් ඔෆ් ඩෙපියුටීස් මණ්ඩලයේ මන්ත්‍රිවරයකු වූ ෆ්‍රෙඩරික් පැසී මහතාගේ නමත්, ස්වීඩනයේ උප්සලා විශ්ව විද්‍යාලයේ නීතිය පිළිබඳ මහාචාර්යවරයකු වූ ෆ්‍රෙඩරික් ස්ටර්සල් විසින් 1968 දී පළ කැරුණු අන්තර් පාර්ලිමේන්තු සංගමයේ අර්ධ නිල ඉතිහාසයක සඳහන් කර තිබේ. මේ දෙදෙනා ගැන යමක් සඳහන් කිරීම මෙහිලා ප්‍රයෝජනවත් වනු ඇත. අන්තර් පාර්ලිමේන්තු සංගමය පිහිටුවනු ලැබුවේ මීට සිය වසකට පමණ පෙරදීය. එහෙත් යුද්ධය හා සාමය පිළිබඳ ප්‍රශ්න ඒ දිනවලත් වර්තමානයේදී මෙන්ම බැරෑරුම් ප්‍රශ්න වශයෙන් සැලකුනේය. ෆ්‍රෙඩරික් පැසී, රාජ්‍ය

කුමන්ත්‍රණයකින් බලයට පත්ව, යුද බලයෙන් රටවල් යටත්කර ගැනීම අතින් වඩා ප්‍රකට වී සිටි අනෙක් නැපෝලියන් අනුගමනය කිරීමට උත්සාහ කළ ලුයී නැපෝලියන් අධිරාජයාට පක්ෂපාතිත්වය ප්‍රකාශ කිරීමේ දිවුරුම දීම ප්‍රතික්ෂෙප කළේය. චේම්බර් ඔෆ් ඩෙපියුටීස් මණ්ඩලයේදී ඔහු ප්‍රංශයේ යටත් විජිත ප්‍රතිපත්තියත් යටත් ජාතීන්ට සැලකූ ආකාරයත් හෙළා දුටුවේය. විලියම් රැන්ඩෝල් ක්‍රීමර් දුප්පත් තත්ත්වයක උපත ලබා වෘත්තියෙන් වඩු කාර්මිකයෙක් වූවෙකි. බ්‍රිතාන්‍ය මහජන මන්ත්‍රී මණ්ඩලයට වෘත්තීය සමිති ව්‍යාපාරය මාර්ගයෙන් පිවිසි ඔහු ඡන්ද බලය පිළිබඳ ප්‍රතිසංස්කරණ වෙනුවෙන් බලවත් ව්‍යාපාරයක් ගෙන ගියේය.

අන්තර් පාර්ලිමේන්තු සංගමයේ මුල් කාලවලදී එය අවශ්‍යයෙන්ම නියෝජනය කළේ යුරෝපයේ හා උතුරු අමෙරිකාවේ රටවල්ය. එහෙත් කල් යත් යත්ම, විශේෂයෙන්ම 2 වැනි ලෝක සංග්‍රාමයෙන් පසු ඇරැඹුනු නිදහස් හා විමුක්ති ව්‍යාපාරවලට පසුව, වැඩි වැඩියෙන් ලෝකයේ සෙසු ප්‍රදේශවල රටවල්ද සාමාජිකත්වය ලබන්නට විය. 1948 දී ශ්‍රී ලංකාව සාමාජිකත්වය ලැබුවාය. ආසියාවේ ප්‍රථම අන්තර් පාර්ලිමේන්තු සංගමීය සම්මේලනය 1956 දී බැංකොක් නුවර පවත්වන ලදී. අන්තර් පාර්ලිමේන්තු සංගමයේ ව්‍යවස්ථා අනුව "ජාත්‍යන්තර නීතියට යටත් වන රාජ්‍යයක් හැටියට පිළිගනු ලබන කිසියම් රාජ්‍යයක ජනගහනය නියෝජනය කරන්නා වූ හා එම රාජ්‍යයේ දේශ සීමාව තුළ පාර්ලිමේන්තු වශයෙන් ක්‍රියා කරන්නා වූ පාර්ලිමේන්තු වල සංවිධානය වී ඇති ජාතික කණ්ඩායම්වලට" සංගමයේ සාමාජිකත්වය දෙනු ලැබේ. නිදහස් පාර්ලිමේන්තු මැතිවරණ පැවැත්වීම, ජාතික කණ්ඩායම් සාමාජිකත්වය සඳහා පිළිගැනීම පිණිස වූ කොන්දේසියක් හැටියට අවශ්‍ය නොවීය. තම රටවලින් පිටමං වී සිටින ජාතික කණ්ඩායම් සාමාජිකත්වය සඳහා පිළි නොගැනෙන බව ද මෙම අර්ථ නිරූපනයෙන් දැක්විණි. අර්ථ නිරූපනය අදාළ කරවීමේදී දුෂ්කරතා හා මතභේද නොතිබුණා නොවේ. "ජාත්‍යන්තර නීතියට යටත්වන රාජ්‍යයක්

හැටියට පිළිගනු ලබන රාජ්‍යයක්'' යන වාක්‍ය ඛණ්ඩය උණුසුම් වාද විවාදවලට භාජන විය. ''පාර්ලිමේන්තු වශයෙන් ක්‍රියා කරන්නාවූ පාර්ලිමේන්තු '' යන වාක්‍ය ඛණ්ඩයට පුළුල් අර්ථ නිරූපනයක් දෙන ලදි. සාමාජිකත්වය විෂයයෙහි මධ්‍යස්ථතාවයත් සර්ව ව්‍යාප්තභාවයත් යන ප්‍රතිපත්ති සැලකිල්ලට ගනු ලැබූ වැදගත් කරුණු විය. එබැවින්, නිකලස් සාර්තුමාගේ තනි ඒකාධිපති බලයක් හැටියට කලින් පැවති, නීති පැනවීමේ බලතල වලින් සමහරක් අන් අය සමඟ පොදුවේ ක්‍රියාත්මක කිරීම සඳහා, විප්ලවකාරී බලවේගවලට යටත්වී එතුමාට 1905 දී පිහිටුවන්නට සිදුවූ ඩූමා නමැති වැඩිකල් නොපැවති ඡන්දයෙන් පත්වූ මන්ත්‍රී මණ්ඩලය පවා, එහි කෙටි කාලය තුළදී අන්තර් පාර්ලිමේන්තු සංගමයෙහි නියෝජනය පුදුමයක් නොවේ.

අන්තර් පාර්ලිමේන්තු සංගමය සිය 1957 හා 1962 සම්මේලනවලදී තීරණය කළ පරිදි, මහජන කැමැත්ත සැබැවින්ම ප්‍රකාශ කෙරෙන ආයතනයක් වියයුතු පාර්ලිමේන්තුවේ පරමාධිපත්‍යය සහතික කිරීමට, සියළුම දේශපාලන ක්‍රම හා ආණ්ඩුක්‍රම උත්සාහ ගතයුතු බවත්, කොයිම රාජ්‍යයක වුවත්, නිදහස් පාර්ලිමේන්තුවක් මත පදනම් වූ ව්‍යවස්ථාවනත ආණ්ඩුක්‍රමයක් නොතිබේ නම්, එම රාජ්‍යයට සැබෑ නෛතික ක්‍රමයක් තිබේයැයි කියා සැලකිය නොහැකි බවත් නිර්දේශ කොට ඇත.

අන්තර් පාර්ලිමේන්තු සංගමය හා වර්තමාන ලෝකය අතර ඇති සම්බන්ධතාව කොතරම් අදාළ ද යන්න ලෝක යුද්ධයෙන් පසු කාල සීමාව තුළ එම සංගමයේ සැලකිල්ලට භාජන වූ විෂයයන්ගෙන්ම පැහැදිළි වේ. ලෝක සාමය පිළිබඳ පොදු ප්‍රශ්න, නිරායුධකරණය හා එක්සත් ජාතීන්ගේ සංවිධානය, යටත් විජිත ක්‍රමය අහෝසිකර දැමීම, ජාතීන් අතර ආර්ථික අසමතාවන් දුරුකර ගැනීම, ජාතීන් අතර සාමකාමී සහජීවනය, ජාතිය පදනම් කරගෙන වෙනස්කම් කිරීම හෙළාදැකීම, දියුණුවන ජාතීන්ට විශේෂ වන යම් යම් ප්‍රශ්න, සරණාගතයන් පිළිබඳ ප්‍රශ්නය, ආගමනය හා විගමනය, කාන්තාවන්ගේ තත්ත්වය හා ළමුන්ගේ ආරක්ෂාව,

ජාත්‍යන්තර කම්කරු සංවිධානයේ සම්මුති නීතියට පැමිණවීමෙන් සමාජ තත්වයන් දියුණු කරලීම, අධ්‍යාපනික, සංස්කෘතික හා විද්‍යාත්මක ප්‍රශ්න, අයවැය ලේඛනය හා විදේශ ප්‍රතිපත්තිය පාර්ලිමේන්තු විසින් පාලනය කිරීම වැනි යම් යම් පාර්ලිමේන්තුමය ප්‍රශ්න යනාදී විවිධ ප්‍රශ්න අන්තර් පාර්ලිමේන්තු සංගමය විසින් දැනටමත් සලකා බලන ලද විෂයයන් අතර වේ.

මෙබඳු සියළු ප්‍රශ්නයන්හිදී නිල සංවිධානයක් නොවන්නා වූ අන්තර් පාර්ලිමේන්තු සංගමයේ වැයම වනුයේ පොදු මතයකට එළඹ ගැනීමය ; මක්නිසාද කියතොත්, එහි බලපෑමක් ප්‍රධාන වශයෙන් ඇති වන්නේ, ජාතික කණ්ඩායම් සිය අදහස් උදහස්වලට නමා ගැනීමට සංගමයට ඇති හැකියාව අනුව බැවිනි. ලෝක පාර්ලිමේන්තු අතර අන්‍යෝන්‍ය සම්බන්ධකම් ඇති කරන ආයතනයක් වශයෙන් අන්තර් පාර්ලිමේන්තු සංගමය ජාතීන් අතර විරුද්ධතාවන් තුනීකර අන්‍යෝන්‍ය සුහදතාව වර්ධනය කරයි. ලොව පුරා ප්‍රජාතන්ත්‍රවාදී පාර්ලිමේන්තුමය ආයතනයන්ගේ වැඩීමට පිහිට වෙයි ; එමෙන් ම ඒ ඒ ස්වරූපයන්ගෙන් පවත්නා යටත් විජිත වාදය අහෝසිකර දැමීමට යත්න දරයි.

1952 බර්න් හි පැවැත්වුනු අන්තර් පාර්ලිමේන්තු සංගමයේ සම්මේලනය ඇමතූ දිවංගත අග්‍රාමාත්‍ය, එස්. ඩබ්ලිව්. ආර්. ඩී. බණ්ඩාරනායක මහතාණෝ මෙම සංගමයේ පරමාර්ථයන් පිළිබඳව අංග සම්පූර්ණ දර්ශනයක් සැකෙවින් දැක්වූහ. මිනිසා විසින් මිනිසාගේ හිත සුවපතා ගොඩ නගාගත් න්‍යාය ධර්මයන්ට මිනිසාම ගැති නොවිය යුතු බවත් දේශ සීමාවන්ගෙන් පමණක් නොව මිනිසාගේ මනසින් ද " අයෝමය කඩතුරාව " ඉවත් කළයුතු බවත් කෝටි සංඛ්‍යාත ජනකායක් නිරාහාරයේ සිටින තාක්, ජාතින්ගේ ව්‍යායාමය සෙසු ජාතීන්ගේ ආක්‍රමණයන්ගෙන් ආරක්ෂාවීම සඳහා හැකිතාක් ඉහළින් සූදනම්වීමට පමණක් සීමාවන තෙක් ලෝකයේ සැබෑ සාමය ඇති නොවිය හැකි බවත් පෙන්වා දුන් එතුමාණෝ යටත් විජිත වාදයේ සුන්බුන් අතුගා ඉවත් කළයුතු බවත් ප්‍රජාතන්ත්‍රවාදයත් ක්‍රියාත්මක වන්නේ

පාර්ලිමේන්තු ක්‍රමය මගින් නිසා දැනට පවත්නා තත්ත්වයන්ට ගැලපෙන ලෙස පාර්ලිමේන්තු ක්‍රමය සකස් කර ගැනීමෙහිලා යුහුසුලු වියයුතු බවත් ප්‍රකාශ කළෝය.

## කාර්මික විස්තර

| | | |
|---|---|---|
| වර්ගය | ... | රුපියල් 1/- |
| සැලසුම | ... | ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තු ගොඩනැගිල්ලේ ඡායාරූපයක් පදනම්කර සැලසුම් කර ඇත. |
| වර්ණ | ... | කළු, කහ, මැජෙන්ටා, නිලට හුරු කොළ සහ ලා දුඹුරු. |
| හැඩය | ... | තිරස්. |
| නිකුත් කෙරෙන දිනය | ... | 1975.04.01. |
| ප්‍රමාණය | ... | මි.මි. 30 × 36. |
| මුද්‍රණකරුවෝ | ... | සීමාසහිත වූපාන් මුද්‍රණ සමාගම ජපානය. |
| මුද්‍රණ ක්‍රමය | ... | අනුකෘත (ඕෆ්සෙට්). |
| පත් සැකැස්ම | ... | මුද්දර 100 බැගින්. |
| භාවිත කඩදසි සහ මැලියම | ... | සර්ම කලාපීය දේශගුණයට ගැලපෙන විශේෂ මැලියම් තැවරූ, දිය සලකුණු රහිත, එක් පසෙක ආලේපිත 104.7 ජීඇස්ඇම් කඩදසි. |

## නිල මුල් දින කවර

අන්තර් පාර්ලිමේන්තු සංගමයේ ලාංඡනය පිළිබිඹු කෙරෙන, පාට තුනකින් යුත් විශේෂ මුල් දින කවරයක් මුද්දර කාර්යාංශය මගින් නිකුත් කෙරෙනු ඇත. එය විශේෂ අත්දින මුද්‍රාවකින් අවලංගු කිරීමට කටයුතු සලසා ඇත.

## විකිණීමේ කොන්දේසි

මුද්දර සහ මුල් දින කවර සැපයීම සඳහා වූ ඇණවුම් මුද්දර කාර්යාංශයේ අධ්‍යක්ෂට මාරු කළ හැකි ලෙස ලියන ලද තැපැල් ඇණවුම්, මුදල් ඇනවුම් හෝ චෙක්පත් සමඟ කොළඹ 1, සෙලින්කෝ මන්දිරයේ, සිව්වැනි මහලේ, මුද්දර කාර්යාංශයේ අධ්‍යක්ෂ යන ලිපිනයට සම්පූර්ණ විස්තර සහිතව එවිය යුතුය.

முத்திரைச் செய்தித்தாள் இல. 41.

அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சு,
டியூக் வீதி,
கொழும்பு 1,
இலங்கை.
01.04.75.

அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தினது 1975 ஆம் ஆண்டின் வசந்தகாலக் கூட்டத் தொடரின் தொடக்க விழாவை முன்னிட்டு இலங்கை அஞ்சல், தொலைத் தொடர்புத் திணைக்களம் 1975, ஏப்ரில் 1 ஆந் தேதி செவ்வாய்க்கிழமை ஒரு நினைவு முத்திரையை வெளியிடவுள்ளது. இக் கூட்டத் தொடர் 1975, மார்ச் 31 ஆந் தேதி முதல் ஏப்ரில் 5 ஆந் தேதிவரை இலங்கையில், பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் என்பது தனது அங்கத்துவ நாடுகளின் பாராளுமன்றங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தேசியப் பிரிவுகளைக் கொண்ட ஓரளவு உத்தியோக பூர்வமான ஒரு நிறுவனம். இதன் ஆரம்பக் கூட்டங்கள் சமாதானத்துக்கான முயற்சிகளை மேலும் விரிவுபடுத்துவதற்குப் பல்வேறு நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நிறுவனமொன்று அவசியம் தேவை எனப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இரண்டாவது அரைக்கால ஐரோப்பாவில் ஏற்பட்ட ஓர் உணர்ச்சியினைத் தொடர்ந்து இடம்பெற்றன. சுவீடனிலுள்ள அப்சாலா பல்கலைக் கழகத்தில் சட்டப் பேராசிரியராகவிருந்த பிறெட்றிக் ஸ்ரேஷல் என்பவரால் 1968 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் ஓரளவு உத்தியோகபூர்வமான வரலாறென்றில், பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் வில்லியம் றண்டால் கிறெமர், பிரான்ஸ் பிரதிநிதியாளர்கள் கூடத்து உறுப்பினர் பிறெடெறிக் பாஸி ஆகியோரே 1889 ஆம் ஆண்டில் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் நிறுவப்படுவதற்குக் காரணகர்த்தாக்களான உண்மையான ஸ்தாபகர்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றுர். அவர்களது பின்னணிபற்றிய ஒரு சில விடயங்கள் நமக்கு நல்லவிளக்கம் அளிப்பன. அனைத்துப்

பாராளுமன்ற ஒன்றியம் சுமார் ஒரு நூற்றுண்டுக்குமுன் அமைக்கப்பட்டது. ஆனுல் யுத்தம், சமாதானம் என்பனபற்றிய பிரச்சினைகள் இன்றுபோல் அன்றும் கவலைக்குரிய காரணங் களாகவேயிருந்தன. திடீர்ப் புரட்சியின் மூலம் அதிகாரத்துக்கு வந்த பேரரசன் லூயி நெப்போலியனுக்குச் சத்தியப் பிரமாணம் செய்தற்கு பிறெடெறிக் பாஸீ அறவே மறுத்துவிட்டார். காரணம், போர்த்திறனில் புகழ்பெற்ற அதே பெயருள்ள மாவீர ஞெருவனை அவர் பாவனை செய்ய முயன்றதாகும். பிரதியாளர் கள் கூட்டத்தில் பிரான்சின் குடியேற்ற நாட்டுக் கொள்கையையும், மக்கள் அடக்கி ஆளப்படுதலையும் திரு. பாஸி வன்மையாகக் கண்டித்தார். வறிய சூழலில் பிறந்தவரான வில்லியம் றண்டால் கிறெமர் அவர்கள் தொழிலைப் பொறுத்த மட்டில் ஒரு தச்சராக இருந்தார். அவர் தொழிற்சங்க இயக்கத்தின் மூலம் பிரித்தானிய மக்கள் சபையில் பிரவேசித்ததுடன் வாக்குரிமைச் சீர்திருத்தத் திற்கான ஒரு கடும் உழைப்பாளியாகவும் திகழ்ந்தார்.

அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் அதன் ஆரம்பக் கூட்டங் களில் முக்கியமாக ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளையே பிரதிநிதித்துவம் வகிப்பதாயிருந்தது. ஆனுல் வருடங்கள் செல்லச் செல்ல, குறிப்பாக 2 வது உலக யுத்தத்துக்குப் பின்னர் இடம்பெற்ற சுதந்திர, விடுதலை இயக்கங்களுக்குப் பின் அதன் உறுப்புரிமை அனைத்துலக அடிப்படையில் அதிகரித்தது. இலங்கை 1948 ஆம் ஆண்டில் உறுப்பினராகச் சேர்ந்தது. முதலாவது அனைத்துப் பாராளுமன்ற ஒன்றிய மாநாடு ஆசியாவில் 1966 ஆம் ஆண்டு பாங்கொக் நகரில் நடைபெற்றது. அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் நியதிச் சட்டங்களின் பிரகாரம், இந்த ஒன்றியத் தின் உறுப்புரிமை "சர்வதேசச் சட்டத்தின் ஒரு பாகமாக அங்கீகரிக்கப்படும் ஒரு நாட்டில் சனத் தொகைக்குப் பிரதிநிதித்து வம் வகிப்பனவாக ஒரு பிராந்தியத்தினுள் அவ்வாறு செயற்படும். பாராளுமன்றங்களின் அமையும் தேசியப் பிரிவுகளுக்கு" விஸ்தரிக்கப்படுகிறது. தேசியப் பிரிவுகளை உறுப்புரிமைக்கு ஏற்றுக் கொள்ளும் விடயம் பாராளுமன்றங்களுக்கான சுதந்திரமான தேர்தல்களின்மீது கட்டுப்பட்டதாக இருக்கவில்லை. இந்த விளக்கவுரையின்படி தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டனவாக உள்ள பிரிவுகள் விலக்கப்பட்டுள்ளன. இந்த விளக்கவுரை அதன் பிரயோகத்தில் கஷ்டத்தையும், சர்ச்சையையும் ஏற்படுத்தாமல்

இருக்கவில்லை. "சர்வதேசச் சட்டத்தின் ஒரு பாகமாக அங்கீகரிக்கப்படும் ஒரு நாடு" என்ற வாசகம் கடுமையான வாதப் பிரதிவாதங்களுக்குள்ளானது. "அவ்வாறு செயற்படும் பாராளுமன்றம்" என்ற வாக்கியத்தொடருக்கு மிகவும் தாராளமான விளக்கம் அளிக்கப்பட்டது. நடுநிலைமை, உறுப் புரிமைத் தகைமை என்பனபற்றிய தத்துவங்கள் பிரதானமாகக் கவனிக்கப்பட்டன. ஆகவேதான் முன்னர் தன்னிச்சைப்படி சட்டங்களை இயற்றுவதற்குச் சார் நீக்கலஸ் அவர்களுக்கிருந்த அதிகாரங்களுட் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளுதற்குப் புரட்சிகர மான நெருக்கடியை அடுத்து 1905 ஆம் ஆண்டில் நிர்ப்பந்தத் தின்மீது அவர் நிறுவநேரிட்டதும் "தூமா" என்ற பெயருடன் சொற்ப காலம் நீடித்ததுமான தேர்ந் தெடுக்கப்பட்ட பேரவைக்கும் அந்த சொற்பகாலம்வரை அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தில் பிரதிநிதித்துவம் கிடைத்ததென்பதில் ஆச்சரியமில்லை.

அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் அதன் 1957 ஆம், 1962 ஆம் ஆண்டு மாநாடுகளில் தீர்மானித்தவாறு, சகல அரசியல், அரசியலமைப்பு முறைமைகளும் மக்களது விருப்பத்தை உண்மையாக வெளிப்படுத்தும் பாராளுமன்ற மேலாண்மைக்கு உத்தரவாதமளிக்க முயலவேண்டுமென்றும், ஒரு நாடு சுதந் திரமான பாராளுமன்றமொன்றின் அடிப்படையில் அமைந்த அரசியலமைப்பு ஆட்சிமுறையைக் கொண்டிருந்தாலன்றி அது ஒரு உண்மையான சட்டமுறை உள்ளதாகக் கருதப்படலாகாதென் றும் சிபார்சு செய்துள்ளது.

யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் கவனத்தை ஈர்த்த விடயங்கள் அது நவீன உலகத்துடன் கொண்டுள்ள பெருந்தொடர்புகளை எடுத்துக்காட்டு வனவாக உள்ளன. அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் மேற் கொண்ட தீர்மானங்களுள் உலக சமாதானம் பற்றிய பொதுப் பிரச்சினைகள்; படைக்கலக் குறைப்பும் ஐக்கிய நாடும்; குடியேற்ற நாட்டு முறை ஒழிப்பு; தேசங்களுக்கிடையில் நிலவும் பொரு ளாதார வேறுபாடுகளைச் சமப்படுத்தல்; தேசங்களுக்கிடையிலான சமாதான சகவாழ்வு; இனவேறுபாட்டைக் கண்டித்தல்; அபிவிருத்தியடையும் நாடுகளின் விசேட பிரச்சினைகள்; அகதிகள் பிரச்சினை; குடிவரவு குடியகல்வு; பெண்களின் நிலையும் சிறுவர் பாதுகாப்பும்; சர்வதேசத் தொழில் நிறுவன மரபொழுங்குகளைச் சட்டத்தில் மாற்றி இடமளிப்பதன் மூலம்

சமுதாய நிலைமைகளைச் சீர்திருத்தல் ; கல்வி, கலாசார, விஞ்ஞான விடயங்கள் ; அரசாங்க வரவு செலவுத் திட்டம், வெளிநாட்டுக் கொள்கை என்பவற்றில் பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு போன்ற பாராளுமன்ற விடயங்கள் ஆகியனவும் இடம் பெற்றன.

அத்தகைய விடயங்கள் யாவற்றிலும், அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் உத்தியோகப்பற்றில்லாத ஒரு நிறுவனம் என்ற முறையில், ஒருமித்த அபிப்பிராயத்தைப் பெறுவதற்கு முயல்கிறது. அதற்குக் காரணம் அதன் தாக்கம் பிரதானமாகத் தேசியப் பிரிவுகளின் மீதான அதன் கருத்து மதிப்பீட்டின் மூலம் பெறப்படுவதாகும். உலகப் பாராளுமன்றங்களுக்கிடையில் தொடர்பை ஏற்படுத்தும் ஒரு பொதுமன்றம் என்ற முறையில் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் தேசங்களுக்கிடையிலான மனக்கசப்பைநீக்கி அவற்றின் மத்தியில் நல்லெண்ணம் நிலவ உழைப்பதுடன் உலகெங்கணுமுள்ள ஜனநாயக, பாராளுமன்ற நிறுவகங்களின் அபிவிருத்திக்கும், குடியேற்ற நாட்டுக் கொள்கையை அதன் சகல வடிவங்களிலும் ஒழிப்பதற்கும் உதவுகின்றது.

எங்கள் கீர்த்திவாய்ந்த பிரதம அமைச்சர் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்களே 1952 ஆம் ஆண்டு “ பேண் ” நகரில் நடைபெற்ற அனைத்துப் பாராளுமன்ற ஒன்றிய மாநாட்டில் ஆற்றிய தனது உரையில், இந்த ஒன்றியத்தின் இலட்சியங்கள் பற்றி ஒரு முழுமையான தத்துவத்தை விளக்கினர். கொள்கைகள் மனிதனுக்கானவையேயன்றி, மனிதன் கொள்கைகளுக்கானவன் அல்லன் என்று கூறிய அவர் நாமனைவரும் இரும்புத்திரைகளை நாடுகளின் எல்லைப் புறங்களிலிருந்து அகற்றுவதுடன் நின்றுவிடாது, மனிதன் மனத்திலிருந்தும் அகற்ற வேண்டுமென்றும் வலியுறுத்தினர். இலட்சக்கணக்கான மக்கள் பசியால் வாடும்வரை, உலகநாடுகள் ஒன்றையொன்று தாக்கக்கூடிய அபாயத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதிலேயே அக்கறை கொண்டிருக்கும்வரை உலகில் உண்மையான சமாதானம் நிலவ முடியாது என்று மேலும் கூறிய திரு. பண்டாரநாயக்க, குடியேற்ற வெறியின் கடைசிச் சின்னங்கள் அழித்தொழிக்கப்பட வேண்டுமென்றும், ஜனநாயகம் நிலவுவதற்குப் பாராளுமன்ற முறையே வழிவகுப்பதால் அந்த முறையானது வழக்கிலுள்ள நிலைமைகளுக்கேற்பத் திட்டமிடப்பட வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

## தொழிநுட்ப விவரங்கள்

| | |
|---|---|
| இனப் பெறுமதி .. | ரூபா 1/- |
| வடிவமைப்பு .. | இலங்கையின் பாராளுமன்றக் கட்டடத்தின் ஒளிப்படமொன்றினை அடிப்படையாகக் கொண்டது |
| நிறங்கள் .. | கறுப்பு, மஞ்சள், ஒண்சிலப்பு, நீலம், பழுப்பு |
| வடிவம் .. | கிடையான |
| வழங்கும் திகதி.. | 1975.04.01 |
| அளவு .. | 30 மிமீ × 36 மிமீ |
| அச்சாளர்கள் .. | தொப்பான் பிரின்டிங் கோ. லிமிரெட், ஜப்பான் |
| அச்சடிக்கும் முறை | எதிர்ப்பக்கக் கறைப்படிவு |
| தாளமைப்பு .. | ஒரு தாளுக்கு 100 முத்திரைகள் |
| பயன்படுத்தப்பட்ட தாளும் பிசினும் | வெப்ப மண்டலத்துக்கு ஏற்ப விசேட பிசின் பூசப்பட்ட நீர் வரிக் குறியின்றி ஒரு பக்கம் பூசப்பட்ட 104.7 ஜிஎஸ்எம் தாள் |

## முதல்நாள் உறைச் சேவை

அ. பா. ஒன்றியத்தின் மரபுச் சின்னத்தைச் சித்தரிக்கும் மூன்று நிறங்களையுடைய விசேடமாக வரையப்பட்ட முதல்நாள் உறையை பணியகம் வழங்கும். அத்துடன் உறையில் விசேட இரத்துச் செய்வதற்கும் ஒழுங்குகள் செய்யப்படும்.

## விற்பனை நிபந்தனைகள்

புதிய முத்திரைகள், முதல்நாள் உறைகள் ஆகியனவற்றை வழங்குவதற்கான கட்டளைகள், முழு விவரங்களுடன் பணிப்பாளர், முத்திரைப் பணியகம், 4 வது மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு 1, என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். இத்துடன் முத்திரைப் பணிப்பாளருக்குச் செலுத்தப்படற்பாலதான தபால் கட்டளை, காசுக்கட்டளை அல்லது காசோலை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

---

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව